**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**

**CASE NO.SC. 65/2022**

**Deposition of P.W.** 5

Name : திரு. சுதேசன்

S/o, D/o, W/o :

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

Dated:21.01.2026

Accused Present.

முதல் விசாரணை–

நான் தற்போது திருநெல்வேலி சரக தனிபிரிவு குற்றபுலனாய்வுதுறை உதவி காவல் கண்காணிப்பாளராக பணியாற்றி வருகிறேன். இதற்கு முன்பு தக்கலை காவல்நிலையத்தில் ஆய்வாளராக பணியாற்றிய போது 04.03.2021ம் தேதி தக்கலை காவல்நிலைய உதவி ஆய்வாளர் திரு. அருளப்பன் என்பவர் பதிவு செய்து வைத்திருந்த தக்கலை காவல்நிலைய குற்ற எண்.127/2021 பிரிவுகள் 294(பி). 307, 323, 506(2) இ.த.ச வழக்கை எனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 05.03.2021ம் தேதி காலை 06.15 மணிக்கு சாட்சிகள் ஆசிஸ், பாசித் ஆகியவர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வைமகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்தேன். அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ.3. மாதிரி வரைபடம் அ.சா.ஆ.4. பின்னர் சம்பவ இடத்திலிருந்து TN 57 AW 1551 என்ற ஸ்கார்பியோ வெள்ளைநிற

காரை அத்தாட்சியில் கைப்பற்றினேன். அந்த அத்தாட்சி அ.சா.ஆ.5. சாட்சிகள் சமீர், இர்ஷாத், ஏபல், பீர் ஆகியவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 27.03.2021ம் தேதி 08.30 மணிக்கு காவல்நிலையத்தில் வைத்து கைது செய்து சாட்சிகள் ரமேஷ், ஆல்பின் ஆகியவர்கள் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்தேன். 27.08.2021ம் தேதி 1வது எதிரியை கோணங்கும் என்ற இடத்தில் வைத்து கைது செய்து ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்தேன். கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்துக்களை படிவம் 95 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். படிவம் 95 அ.சா.ஆ.6. TN 57 AW 1551 என்ற ஸ்கார்பியோ வெள்ளைநிற கார் சா.பொ.1 வழக்கு பதிவு செய்த உதவி ஆய்வாளரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 31.08.2021ம் தேதி விசாரணை முடித்து எதிரிகள் மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

பொய்யான புகாரின் அடிப்படையில் வழக்கு பதிவு செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. வழக்கு ஆவணங்கள் காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் சான்று பொருட்கள் கைப்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல. வழக்கிற்கும், எதிரிக்கும் சம்மந்தமில்லை என்று சொன்னால் சரியல்ல.